


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (8.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு (Combined Engineering Service Examination) வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகிய துறைகளில் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 246 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பீலா வெங்கடேசன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ. தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், 29 மாவட்டங்களில், 141 அரசுப் பள்ளிகளில் 171.16 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 754 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 17 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் கீழ் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. சோ. மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர், முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ. ஆ. நரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு (Combined Engineering Service Examination) வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகிய துறைகளில் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 246 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறைஅமைச்சர் கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .எ.வ.வேலு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பீலா வெங்கடேசன், நகராட்சி நிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்திரு. கே. நந்தகுமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ. தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 49 நபர்களுக்கு, கருணை அடிப்படையில் 43 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 6 தட்டச்சர்கள் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. சோ. மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர், முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ. ஆ. நரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

## பதிவுத்துறைத் தலைவர் அறிவிப்பு!

*சென்னை, நவ. 9 - சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்வது வழக்கம்.*

*தற்போது ஐப்பசி மாதத்தின் சுபமுகூர்த்த தினங்களான 07.11.2024 மற்றும் 08.11.2024 ஆகிய நாட்களில் அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப் பட்டுள்ளன.*

*இதனை ஏற்று ஐப்பசி மாதத்தின் சுபமுகூர்த்த தினங்களான 07.11.2024 மற்றும் 08.11.2024 ஆகிய நாட்களில் ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப் பட்டுள்ளது.*

*இவ்வாறு பதிவுத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.*

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏண்ணே; ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினர் தலைவர் பிர்ஸா முண்டா அவர்களின் 150 ஆவது பிறந்த நாளை நாடு முழுதும் கொண்டாட வேண்டும் என பிரதமர் மோடி அவர்கள் உத்தரவிட்டுள்ளாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; 81 தொகுதிகளைக் கொண்ட ஜார்கண்ட் மாநில சட்டப் பேரவைக்கு வரும் 13, 20 தேதிகளில் தேர்தல் நடைபெறப் போகிறது.**

**அந்த மாநிலத்தின் பூர்விகக் குடியினர் அதாவது பழங்குடியினர் மாநிலத்தின் 5ல் 2 பங்கு மக்கள் தொகையைக் கொண்டுள்ளவர்கள்.**

**ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மீண்டும் வெற்றி பெற்றால், வங்க தேசத்திலிருந்து ஊடுருவல் அதிகமாகி, பழங்குடியினர் சிறுபான்மை ஆகிவிடுவார்கள் - என்று பிரதமர், அவர்களின் வாக்குகளைக் கவர்வதற்காக, பிற்போக்குவாதப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.**

**அதன் தொடர்ச்சியாகவே, பிர்ஸா முண்டா தொடர்பான அறிவிப்பு; பழங்குடியினர் மீது கொண்ட பாசத்தினால் அல்ல; பாசாங்கினால் வந்திருக்கிறது அந்த அறிவிப்பு.**

**அந்த அறிவிப்பு இலைமறை காய்போல வெளிப்படுகிறது தானே.**

# லாஸ் ஏஞ்சல்ஸ், வென்ச்சுரா நகரங்களில் பரவி வரும் காட்டுத் தீ!

*கலிஃபோர்னியா, நவ. 9 - காட்டுத் தீயின் தாய் என்று சூழலியல் ஆர்வலர்கள் பலரால் குறிப்பி டப்படும் அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் லாஸ் ஏஞ்செல்ஸ் மற்றும் வென்ச்சுரா நகரங்களில் பல ஏக்கர் வனப்பரப்பில் காட்டு தீ பரவி வருகிறது. கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள வென்ச்சுரா மலைப்பிரதேசத்தில் திடீரென காட்டு தீ பரவியது.*

*நேற்று முன்தினம் ஒரே நாளில் 10,400 ஏக்கர் பரப்பளவிலான பல பகுதியை காட்டு தீ சாம்பலாக்கி உள்ளது. தீயை அணைக்கும் பணியில் இரவு பகலாக தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு உள்ளனர். இந்த பணியில் 140 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஹெலிகாப்டர்கள் மூலமாகவும் நீரை இரைத்து தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

முரசொலி விநியோக மேலாளர் டி.கண்ணன் – நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் டி.அண்ணாதுரை தாயார்

# குள்ளம்மாள் தங்கவேல் நான்காம் ஆண்டு நினைவு நாள்!

## கழகத்தினர் பங்கேற்பு!

கடலூர், நவ. 9 - கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் ஒன்றிய கழக துணைச் செயலாளர், பூலாம்பாடி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் - ஆசிரியர் கழக தலைவர் டி.அண்ணாதுரை, கோயம்பேடு மார்க்கெட் பழக்கடை டி.மனோகரன் மற்றும் முரசொலி விநியோக மேலாளர் டி.கண்ணன் ஆகியோரின் தாயார் குள்ளம்மாள் தங்கவேல் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு தினம் நாளை (10.11.2024 - ஞாயிற்றுக் கிழமை) அனுசரிக்கப்படுகிறது.



கடந்த 24.12.2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அம்மையாரின் படத்திறப்பு நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர்–துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் மற்றும் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர், தொ.மு.ச. நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிலையில் அம்மையாரின் நான்காம் ஆண்டு நினைவு தினம் நாளை (10.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில், கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் வடக்கு ஒன்றியம், வேப்பூர் அருகில் உள்ள பூலாம்பாடி கிராமம், அவரது இல்லத்தில் அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் உறவினர்கள் - கழகத்தினர் கலந்து கொள்கிறார்கள்.



தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (08.11.2024) சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), ச.செல்வராஜ் (செய்தி), தமிழறிஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.